**<u>O.S.No. 174/2012</u>**

**<u>DW1 :</u> சண்முகம்** தேதி 10.11.2025

**<u>பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் 15.3.1946 ல் பிறந்தேன். நான் 1963 ல் பியுசி படித்தேன். 3.5.1965 ல் அரசு வேலைக்கு சேர்ந்தேன். நான் படிக்கும் போது திருவேங்கடம் தெருவில் பழைய கதவு எண்.86 ல் குடியிருந்தேன். வாதி என் உடன் பிறந்த சகோதரி. வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சொத்தில் பங்கு கேட்டு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தில் மொத்தம் 5 அயிட்ட சொத்துகள் உள்ளது. தாவா 1 ம் அயிட்ட சொத்து திருவேங்கடம்பாளையத்தில் உள்ள சுள்ளிகாட்டு தோட்டம் யாருக்கு முதலில் பாத்தியப்பட்ட சொத்து என்றால் என் பாட்டி பாவாயம்மாளுக்கு 1950 ல் கிரையம் வகையில் பாத்தியம். சுள்ளிகாட்டு தோட்டத்தில் வீடு உள்ளது. பாவாயம்மாளுக்கு ஒரே மகன். அவர் பெயர் நாச்சிமுத்து கவுண்டர் 1ம் பிரதிவாதி. தாவா 1 ம் அயிட்ட சொத்தை பாவாயம்மாள் இறந்த பிறகு 1ம் பிரதிவாதி தான் அனுபவித்து வந்தார். அதில் வந்த வருமானத்தை கொண்டு வீடு கட்டி வாடகைக்கு விட்டாரா என்றால் சரியல்ல. அது மானாவாரி பூமி என்பதால் வருமானம் இல்லை. அந்த 1 ம் அயிட்ட சொத்தில் வந்த வருமானத்தை வைத்து தான் வீடு கட்டி குடியிருந்து கொண்டும் மற்ற வீட்டை வாடகைக்கு விட்டு வந்தார் என்றால் சரியல்ல. நான் பிறப்பதற்கு முன்பே ராமணகவுண்டர் இறந்து விட்டார் என்றால் சரிதான். நான் வேலைக்கு போகும் 1965 ல் உயிருடன் தான் இருந்தார். ராமணகவுண்டரின் இறப்பு சான்று உள்ளது. அதை தாக்கல் செய்ய முடியும். என் பாட்டி பாவாயம்மாள் என் தாத்தா ராமணகவுண்டர் இறந்த பிறகு இறந்துவிட்டார். வருடம் ஞாபகத்தில் இல்லை. நான் வேலைக்கு சென்று 12 வருடம் கழித்து தான் என் தாத்தா ராமணகவுண்டர் இறந்தார். 1972 என்றால் சரிதான். பாவாயம்மாள் 1976 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பாவாயம்மாள் இறந்த பிறகு

அவருடைய மகன் 1 ம் பிரதிவாதி தான் ஓட்டி வந்தார். 1 ம் அயிட்ட சொத்து சுள்ளிகாட்டு தோட்டத்தில் போர்வெல் மற்றும் 10 எச்.பி மோட்டார் உள்ளது என்றால் சரிதான். மேற்படி போர்வெல் மற்றும் 10 எச்.பி மோட்டார் இருந்துள்ளதால் அதன் மூலம் விவசாயம் செய்து என் அப்பா வருமானம் ஈட்டி வந்தார் என்றால் சரியல்ல. தாவா 1 ம் அயிட்ட சொத்து மானாவாரி பூமி அல்ல என்றும் அச்சொத்தில் வந்த வருமானத்தை கொண்டு பவளத்தாம்பாளையத்தில் உள்ள 2 ம் அயிட்ட சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. 2 ம் அயிட்ட சொத்தை என்னுடைய அம்மாவும் அப்பாவும் கிரையம் வாங்கினார்கள். என் அப்பா சந்தையில் மாட்டு வியாபாரம் செய்து அதில் வந்த வருமானத்தை கொண்டு வாங்கினார். என் தந்தை சந்தைக்கு சென்று மாட்டு வியாபாரம் செய்யவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் என் அப்பாவை மாட்டு வியாபாரி என்று தான் சொல்வார்கள். நான் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பவளத்தாம்பாளையத்தில் உள்ள சொத்தை எந்த வருடத்தில் என் பெற்றோர் வாங்கினார்கள் என்றால் 1947 ல் வாங்கினார்கள். தேதி ஞாபகத்தில் இல்லை. நான் பிறந்து 6 மாதம் கழித்து தான் பவளத்தாம்பாளையத்தில் உள்ள சொத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். பவளத்தாம்பாளையத்தில் உள்ள சொத்து என் தந்தை எந்த வருமானத்தை கொண்டு வாங்கினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என் அப்பா அம்மா சொல்லி எனக்கு தெரியவந்தது. என் தந்தை சுயமாக மாட்டு வியாபாரமோ சந்தை வியாபாரமோ செய்யவில்லை என்றும் சுள்ளிகாட்டில் வந்த வருமானத்தை கொண்டு தான் 2 ம் அயிட்ட சொத்தை என் பெற்றோர் கிரையம் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. என் அம்மாவின் பெற்றோர் கொடுத்த தொகை மற்றும் என் தந்தையின் மாட்டு வியாபாரத்தின் மூலம் வந்த வருமானத்தை கொண்டு தான் பவளத்தாம்பாளையத்தில் உள்ள சொத்தை வாங்கினார்கள்

என்று சொல்கிறேன். என் தாயாருக்கு அவர் பெற்றோர் கொடுத்த தொகையை வைத்து கிரையம் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா விவசாயத்தின் மூலம் வந்த வருமானத்தை கொண்டும் என் அம்மா அவர் பெற்றோர் வீட்டில் இருந்து வந்த சீதன தொகையை கொண்டும் வாங்கியதாக சாட்சி சொல்கிறார். என் தந்தை இறக்கும் போது அவருடைய வயது 88 இருக்கும். 2012 ல் இறந்தார். என் தாயார் 3 வருடம் கழித்து இறந்துவிட்டார். என் தாயாருக்கு இறக்கும் போது வயது 90க்கும் மேல் இருக்கும். என் தாயாரும் தந்தையும் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் பெற்றோரின் குடும்ப அட்டையை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் செய்திருக்கிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் குடும்ப அட்டையில் என் தந்தையின் வயது 68 என்றும் தாயாரின் வயது 66 என்று உள்ளது. பவளத்தாம்பாளையத்தில் உள்ள சொத்து யாருடைய அனுபவத்தில் இருந்தது என்றால் என் பெற்றோர்கள் அனுபவத்தில் இருந்தது. அங்கேயே குடியிருந்தார்கள். என் அம்மா பெருந்துறையில் உள்ள திருவேங்கடம்பாளையம் புதூரில் என் அப்பா பவளத்தாம்பாளையத்திலும் இறந்தார்கள். என் பெற்றோர் மற்றும் என்னுடன் பிறந்தவர்கள் ஆகியோருக்கு கூட்டு குடும்ப சொத்து என்று சொன்னால் சரியல்ல கூட்டு குடும்பமே இல்லை. நான் வழக்கிற்காக கூட்டு குடும்ப சொத்து அல்ல என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தை வீட்டிற்கு மூத்தவர் என்பதால் கர்த்தாவாக இருந்து அவர் பெயரிலும் என் தாயார் பெயரிலும் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல.